அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2014

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

## எழுத்தறிவுப் போட்டி

## அதிமேற் பிரிவு

(13 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(1) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக** (5 புள்ளிகள்)

1. ஆறாயிரம் ________________ + ____________________
2. தமிழிசை ________________ + ____________________
3. துப்பறிபவர் ________________ + ____________________
4. கருப்புவில் ________________ + ____________________
5. பொற்காப்பு ________________ + ____________________

**(2) கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** (5 புள்ளிகள்)

1. அமாவாசை = ________________________________________
2. குற்றவாளி = ________________________________________
3. வள்ளல் = ________________________________________
4. பொதுநலம் = ________________________________________
5. தவப்பொழுது = ________________________________________

**(3) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் கோடிடப்பட்டுள்ள இடங்களிற் பொருத்தமான சொற்களை எழுதி வாக்கியங்கைப் பூர்த்தி செய்க.**
(10 புள்ளிகள்)

1) மங்களகரமான வைபவங்களுக்குத் தங்களின் வீட்டு வாசலில் மாவிலைத்

____________________ கட்டுவது தமிழர்களின் வழக்கம் ஆகும்.

2) தமிழ் நிகழ்ச்சிகளைத் ____________________ வாழ்த்துடன்

ஆரம்பிப்பது தமிழரின் வழக்கம்.

3) ஒருவர் உயிர் வாழ்வதற்கு ____________________ இன்றியமையாதது

தண்ணீர்.

4) இக்காலத்திற் சிறுவர்கள் உட்பட எல்லோரும் நவீன தகவல் தொழில் நுட்ப

________________________ப் பயன்படுத்துகிறார்கள்.

5) தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் நடத்தப்படுவது எமது தாய் மொழியைத் தொடர்ந்து கற்கவேண்டும் என்ற ________________________ கூட்டுகிறது அல்லவா?

6) நித்திரைக்குச் செல்லும் குழந்தைகளைத் ________________________ப் பாடித் தூங்கவைக்கும் முறை அவர்களுக்கு மனஅமைதியை வளர்ப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

7) முருங்கை மரத்தின் காய், இலை முதலியவற்றைத் தமிழர்கள் கறி ________________________ பயன்படுத்துவர்.

8) வானத்திற் காணப்படும் எண்ணற்ற ________________________ இரவில் மின்னியபடி காட்சியளிக்கும்.

9) பருவ மழை ________________________ பயிர்கள் நன்றாக வளரவில்லை.

10) அளவுக்கு மிஞ்சினால் ________________________ நஞ்சு.

**(4) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல்லை அடிக்கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. தமிழ் மொழியைத் <u>தொடர்ந்து</u> பயில்பவர்கள் நாளடைவில் அம்மொழியிலே பாண்டித்தியம் பெற்று விளங்குவர்.

   அ. ஓய்வுநேரத்தில் ஆ. இடைவிடாது

   இ. அடிக்கடி ஈ. பொழுதுபோக்காக

2. ‘போப்’ பாதிரியார் தன்நலம் பாராது தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார்.

அ. அஞ்சாது ஆ. குன்றாது இ. தயங்காது ஈ. ஓயாது

3. ஒருவருக்குப் பொருட்செல்வத்தைக் காட்டிலும் அறிவுச்செல்வமே மேன்மை தரும்.

அ. ஊக்கம் ஆ. உயர்வு இ. செல்வாக்கு ஈ. நன்மை

4. நாட்டுப்பற்றுடைய ஓவ்வொருவரும் பொதுத் தொண்டிற் பங்கேற்று நாட்டிற்குச் சேவை செய்யவேண்டும்.

அ. கலந்துகொண்டு ஆ. விலகி இ. பிரிந்து ஈ. உதவி

5. தற்காலத்திற் பலவிதமான தகவல்கள் பெறுவதற்கு இணையத்தளங்கள் துணை புரிகின்றன.

அ. பார்ப்பதற்கு ஆ. அடைவதற்கு இ. ஒலிபரப்ப ஈ. சொல்வதற்கு

6. அன்னை திரேசாவின் தன்னலமற்ற தொண்டுக்கு இந்த ஞாலமே தலை வணங்கியது.

அ. நாடே ஆ. உலகமே இ. கண்டமே ஈ. இயற்கையே

7. ஒழுக்கம் விழுப்பம் தரும்.

அ. பலம் ஆ. ஊக்கம் இ. பொறுமை ஈ. உயர்வு

8. அன்னைக்கு ஒப்பானவர் இவ்வுலகில் வேறொவரும் இல்லை.

அ. எதிரானவர் ஆ. துணையானவர் இ. அன்பானவர் ஈ. சமமானவர்

9. இயந்திரமயான இவ்வுலகில் கலைகளை நுகரப் பலருக்கு நேரம் கிடைப்பதில்லை.

அ. ஆராய ஆ. அனுபவிக்க இ. பயில ஈ. காண

10. நீதிபதி வழக்கைத் தீர விசாரித்த பின்பு குற்றவாளிக்கு நீதியான தீர்ப்பு வழங்கியதும் பார்வையாளர்கள் அவரைப் போற்றினார்கள்.

அ. நல்லபடியான ஆ. ஆர்வத்துடன் இ. கவனமாக ஈ. நியாயமான

**(5) கீழே தரப்பட்ட ஒவ்வொரு செல்லையும் பாவித்து அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைக்கவும்.** (20 புள்ளிகள்)

அ. வளி: ……………………………………………………………………

……………………………………………………………………………..

வலி: ……………………………………………………………………

……………………………………………………………………………..

ஆ. ஒளி: ……………………………………………………………………

……………………………………………………………………………..

ஒழி: ……………………………………………………………………

……………………………………………………………………………..

இ. விழை: ……………………………………………………………………

……………………………………………………………………………..

விளை: ……………………………………………………………………

……………………………………………………………………………..

ஈ. பொழிதல்:……………………………………………………………

……………………………………………………………………………..

பொலிதல்: ……………………………………………………………

……………………………………………………………………………..

உ. கழகம்: ……………………………………………………………………

……………………………………………………………………………..

கலகம்: ……………………………………………………………………

……………………………………………………………………………..

## பகுதி 2

**(6) பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்தபின் கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.** (30 **புள்ளிகள்**)

காந்தியடிகள் மிக எளிய வாழ்க்கை வாழ்ந்த சான்றோர் என்பது உலகறிந்த செய்தி. அவர் மிகச் சிக்கனமாகவும் வாய்மையே வெல்லும் என்ற கொள்கையுடனும் வாழ்ந்து நமக்கு வழிகாட்டியாக விளங்கினார். எழுதித் தேய்ந்துபோன சிறு பென்சில் என்றாலும் சிறு காகிதத் துண்டு என்றாலும் அவற்றை வீணாக்காமல் இயலுமானவரைக்கும் பாவிப்பது அவரின் பழக்கமாக இருந்துள்ளது. அவர் விரும்பியிருந்தால் ஆடம்பரமாக அரச வாழ்வு வாழ்ந்திருக்கலாம். ஆனால், எளிமையை ஓர் அறமாகப் போற்றிய அவருடைய மனம் அதற்குச் சிறிதும் இடம்தரவில்லை.

உலகில் கோடிக்கணக்கானவர்கள் அடிப்படைத் தேவைகளே இல்லாமல் வாடுகிறார்கள். அவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு வசதிகளை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பலர் குடிநீர் இன்றித் தவிக்கிறார்கள். கால் வயிற்றுக் கஞ்சிக்காக ஏங்குகிறார்கள். பணம் படைத்தவர்கள் சுவாமி விவேகானந்தர் - மகாத்மா காந்தியடிகள் போன்றோரைப் போல ஏழைகளுக்கு இரங்கும் சிந்தனையை வளர்க்க வேண்டும். அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர் புகழுடன் விளங்கிய காலத்தில், ஒரு செல்வரின் மாட மாளிகையில் தேவைக்கதிகமான உல்லாச வசதிகளுடன் விருந்தினராக இருந்தபோது, இந்தியாவில் வறுமையில் வாடித் தவிக்கும் கோடிக்கணக்கான ஏழைகளை நினைத்துக் கண்ணீர் விட்டுக் கலங்கினாராம். காந்தியடிகள் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்த காலத்தில், மானத்தை மறைப்பதற்கு ஆடை இல்லாமல் வாடும் ஏழை மக்களைப் பார்த்து மனம் கலங்கினார். இவர்களுக்கு நான்கு முழத்துணியே கிடைக்காதபோது, எனக்கு மட்டும் இவ்வளவு உடைகள் ஏன் என்று எண்ணிக் கலங்கினார். எண்ணி எண்ணி ஒரு முடிவுக்கு வந்தார். அவர் தம் மேல் சட்டையைக் களைந்தார். முழங்கால் வரைக்கும் உடுத்திய கதர்வேட்டியுடனும் மேலுடம்பில் ஒரு சிறு துணியுடனும் எங்கும் சென்று வந்தார். வாழ்நாள் முழுவதும் அந்த எளிய கோலமே கொண்டார். அவரைப் போல அவ்வளவு பெரிய தியாகம் செய்யாவிட்டாலும் ஆடம்பரமாக வாழ்வதையாவது நாம் தவிர்க்கலாம் அல்லவா?

எல்லோரும் ஆடம்பரமாக வாழ விரும்பும் இந்த உலகத்தில் எளிய வாழ்க்கை வாழும் சிலர் அவ்வாறு வாழ்வதால் பயன் இல்லையே என்று எண்ணிச் சோர்வு கொள்ளக் கூடாது. இராமன் கடலைக் கடந்து

இலங்கைக்குச் செல்ல அணை கட்டுவிப்பதைப் பார்த்ததும் ஒரு அணில் கடல் நீரில் நனைந்து மணலிற் புரண்டு பின்னர் தனது உடலில் ஒட்டிய மணலைக் கடலிற் சேர்த்து மறுபடியும் மறுபடியும் அவ்வாறு செய்து இராமனுக்கு உதவ முயன்றதாகக் கூறுவார்கள். அது ஒரு கதைதான் அணில் அவ்வாறு உணர்ந்து செய்யமுடியாது. அது கற்பனையே. ஆனால் அந்தக் கதையில் ஒரு நீதி உள்ளது. ஒவ்வொருவரும் அவரவரின் இயல்பிற்கு ஏற்ப நல்வழியிலே தொண்டு செய்து உலகத்திற்கு உதவ வேண்டும் என்பதே அந்த நீதி. ஆகவே, ஒருவர் தமது பொருளைத் தருமம் செய்ய இயலாவிட்டாலும், எளிய வாழ்க்கை வாழ்ந்து ஆடம்பரத்தைக் குறைக்க முயல வேண்டும்.

ஒவ்வொருவரும் தமது வசதிக்கேற்பப் போதுமென்ற மனமே பொன்செயும் விருந்து என்ற கோட்பாட்டுடன் எளிமையான வாழ்வு வாழவேண்டும். ஏனென்றால் ஆடம்பர வாழ்வில் மனஅமைதி பெறமுடியாது. ஆடம்பரமாக வாழ்வோர் தம்மைவிட அதிக ஆடம்பரமாக வாழ்வோரைப் பார்த்து அவர்களைப் போலத் தாமும் வாழ முடியவில்லையே என்று எப்போதும் ஏங்குவதுண்டு. மனம் ஒரு குரங்கு அல்லவா? தம்மிலும் பார்க்க ஆடம்பரமாக இருப்பவர்களைப் பார்த்து ஏங்கும் வாழ்க்கையில் அமைதி ஏது? எளிய வாழ்க்கை வாழ்பவர்களுக்கு அந்த ஏக்கமும் அமைதியின்மையும் ஏற்பட வாய்ப்பு இல்லை. எளிமை வாழ்க்கை ஒருவருக்கு பிறரின் ஆடம்பர நிலையை எண்ணிக் கலங்காத மனத் திண்மையையும் மன அமைதியையும் அளித்து அவர்களை வாழ்வாங்கு வாழ வழி செய்கிறது.

**வினாக்களுக்கு விடை தருக**

1. காந்தியடிகளின் வாழ்க்கை நமக்கு எதனை உணர்த்துகின்றது?

______________________________

______________________________

______________________________

2. நாம் எதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும் என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்?

______________________________

______________________________

______________________________

3. காந்தியடிகள் எளிமையான ஆடை அணியத் தொடங்கியதற்கு என்ன காரணம்? அவர் அதைச் செயலில் எப்படிக் காட்டினார்?

______________________________________________

______________________________________________

______________________________________________

4. இராமனுக்கு உதவி செய்த அணில் உணர்த்தும் உண்மை எது?

______________________________________________

______________________________________________

______________________________________________

5. ஒருவர் எப்படி வாழ வேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

______________________________________________

______________________________________________

______________________________________________

**(7) கீழே தரப்பட்ட கட்டுரையையோ அல்லது கீழுள்ள குறிப்பை வாசித்தது அதற்கமைய ஒரு கடிதம் எழுதுக.** (20 புள்ளிகள்)

அ) ‘சமயக் கல்வியின் அவசியம்’ என்ற தலைப்பில் 200 சொற்களுக்குக் குறையாது ஒரு கட்டுரை எழுதுக.

**அல்லது**

ஆ) நீங்கள் கல்வி அமைச்சர் ஆனால் தமிழ் மொழியை நல்ல நிலைக்கு உயர்த்தவும் இங்கு வாழும் தமிழ்ப் பிள்ளைகள் தமிழை விரும்பிக் கற்பதற்கும் எவ்வித திட்டங்களைக் கொண்டு வருவீர்கள் என்பதைக் குறித்து உங்களின் நண்பனுக்கு 200 சொற்களுக்குக் குறையாது ஒரு கடிதம் வரைக.